# T அரையாண்டுப் பொதுத் தேர்வு- 2024

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி -1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 15×1=15

1) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

2) சொற்றொடர்களை முறைப்படுத்துக
அ) எறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி
இ) தழுவிப் பிடித்தல் என்கிறது
i) ஆ-அ-இ ii) ஆ-இ-அ iii) இ-ஆ-அ iv) இ-அ-ஆ

3) "ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே"
இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

4) முல்லை பெரியாறு அணையைக் கட்டியவர்
அ) காமராசர் ஆ) ஜான் பென்னி குவிக்
இ) சர் ஆர்தர் காட்டன் ஈ) கரிகால் சோழன்

5) பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ________
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

6) இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணக் குறிப்புத் தருக
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமை

7) 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?
அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்
ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

8) செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை ________
அ) செயப்பாட்டுவினை ஆ) செய்வினை
இ) தன்வினை ஈ) உடன்பாட்டு வினை

9) உலக அளவில் தமிழ் நூல்கள் அதிகம் உள்ள நூலகம் ________
அ) சரசுவதி மகால் நூலகம் ஆ) திருவனந்தபுரம் நடுவண் நூலகம்
இ) தேசிய நூலகம் ஈ) கன்னிமாரா நூலகம்

10) சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை
ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு
இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்
அ) ஆ, இ சரி; அ தவறு ஆ) அ, இ சரி; ஆ தவறு
இ) மூன்றும் சரி ஈ) மூன்றும் தவறு

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11) இந்திய தேசிய இராணுவம் ________ இன் தலைமையில் ________ உருவாக்கினார்

அ) சுபாஷ்சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ்சந்திரபோஸ், ஜப்பானியர்

இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க! என வாழ்த்தி;
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென"

12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

அ) தமிழோவியம் ஆ) தமிழ்விடுதூது இ) மணிமேகலை ஈ) குறம்

13) இந்தப் பாடல் எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது?

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

14) இப்பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்க

அ) குறம் - கொடுப்பாய்க்கு ஆ) வசியும் வளனும்

இ) குறம் - சிந்து ஈ) பசியும் வசியும்

15) 'சுரக்க' என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) வேற்றுமைத்தொகை ஈ) வியங்கோள் வினைமுற்று

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 4×2=8

(21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)

16) விடைகளுக்கேற்ற வினா அமைக்க

அ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ்

ஆ) ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர்.

17) 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?

18) "பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

19) 'நடுகல்' என்றால் என்ன?

20) "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்" என்ற முழக்கம் யாரால் எப்போது செயல்பட்டது?

21) 'மிகுதியான்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 5×2=10

22) வல்லினம் மிகும் இடங்கள் இரண்டனைக் கூறி சான்று தருக.

23) ஒரே தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

அ) பணிந்து - பணித்து ஆ) மாறு - மாற்று

24) பகுபத உறுப்பிலக்கணம் தருக: பரப்புமின்

25) கலைச்சொல் தருக. அ) Vegetable soup ஆ) Nautical Mile

26) பழமொழிகளை நிறைவு செய்க.

அ) சித்திரமும் கைப்பழக்கம் ________

ஆ) கற்றோர்க்குச் சென்ற ________

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27) இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க
அ) சுடர்க்கொடி பாடினாள். மாலன் பாடினான்
ஆ) கவலையற்ற எதிர்காலம் : கல்வியே நிகழ்காலம்
28) விடைகளைத் தமிழ் எண்களில் எழுதுக.
அ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆ) திருக்குறளின் அதிகாரங்கள்

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

29) பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.
30) உரைப்பத்தியைப் படித்துப் வினாக்களுக்கு விடை தருக.

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர் பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன.

வினாக்கள்:-
அ) மிடுக்குத் தோற்றத்திற்கும், ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?
ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது எது?
இ) இவ்வகை மாடுகளை விரும்பி வாங்கிச் செல்லும் மாநிலத்தவர் யாவர்?
31) உங்களை மகிழச் செய்த பணிகள் எவையேனும் மூன்று பற்றி எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
வினா எண். 34க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 2×3=6

32) விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.
33) வங்கியில் இணையவழிச் சேமிப்புக் கணக்குத் தொடங்கும் நடைமுறையை எழுதுக.
34) அடிபிறழாமல் எழுதுக.
அ) காடெல்லாம் ........... எனத் தொடங்கும் பெரியபுராணப்பாடல் (அல்லது)
ஆ) சொல் அரும் ......... எனத் தொடங்கும் சீவகசிந்தாமணிப் பாடல்

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2×3=6

35) .பண்பாகுபெயர், தொழிலாகுபெயர் - விளக்குக
36) எண்ணும் எழுத்தும் கண் - இத்தொடரை ஒருவர் 1 2 3 4 1 5 6 7 4 8 2 என்று குறிப்பிடுகிறார். இதே முறையைப் பின்பற்றிக் கீழ்க்காணும் சொற்களை எவ்வாறு குறிப்பிடுவீர்கள்? அ) எழுது ஆ) கண்ணும் இ) கத்து
37) "அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்"
- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

T **IX தமிழ்**

(4)

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 5×5=25


38) அ) நீங்கள் பாராட்டுப் பெற்ற சூழல்கள் ஐந்தனை எழுதுக. (அல்லது)

ஆ) சமூகத்திற்கு நீங்கள் ஆற்றும் பணிகள் ஐந்தனை எழுதுக.

39) அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக. (அல்லது)

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) நயம் பாராட்டுக.

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சிலிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு என எரிக்கும்
மங்காத தணற்பிழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே!

(அல்லது)

42) மொழிபெயர்க்க

அ) Practice what you have learnt
ஆ) Winners don't do different things; they do things differently - Shiv Khera
இ) You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam
ஈ) The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru
உ) Union is strength

பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:- 3×8=24

43) அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. (அல்லது)

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க

44) அ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை? (அல்லது)

ஆ) "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

45) அ) "எனது பயணம்" என்ற தலைப்பில் உங்கள் அனுபவத்தைக் கட்டுரையாக்குக

(அல்லது)

ஆ) 'சாலைப் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.

(முன்னுரை – உயிர்ப்பாதுகாப்பு – சாலை வகைகள் – வேகக்கட்டுப்பாடு – சாலை விதிகள் – முடிவுரை)

********

Scanned with CamScanner